(உ) கேள்வியில் குறிப்பிட்ட இளைஞன் 1974-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் தேதி அன்று கிருஷ்ணபுரம் தொடக்க சுகாதார நிலையத்திற்கு வாசக்டமி அறுவை சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டதாகவும் ஆனால் அவன் சித்த சுவாதீனமற்ற நிலையில் இருந்ததால் அந்நிலைய மருத்துவ அதிகாரி அறுவை சிகிச்சை செய்ய மறுத்துவிட்டதாக விசாரணையிலிருந்து தெரிய வந்தது. திருச்சி மாவட்ட குடும்ப நலத்திட்ட மகப்பேறு குழந்தைநல அதிகாரி 1974-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் தேதியில் அவ்விளைஞனை நேரில் பார்வையிட்டு பரிசோதித்ததில் அவனுக்கு வாசக்டமி அறுவை சிகிச்சை செய்யப்பட்டது உண்மையென்று தெரிந்த போதிலும் எங்கு, எப்பொழுது அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்பதனைத் தெளிவாக அறியமுடியவில்லை. அவ்விளைஞன் 1974-ம் ஆண்டு மார்ச் மாதம் 8-ந் தேதி முதல் 1974-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் தேதி வரையில் சித்த சுவாதீனமற்ற நிலையில் வீட்டிலிருந்து காணாமல் போயிருந்தான் எனவும் அந்நிலையில் யாராவது அவனை எங்காவது அறுவை சிகிச்சை செய்து கொள்ள தூண்டியிருக்கக் கூடும் என்பது மட்டும் புலனாகிறது. அவ்விளைஞன் 1974-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் தேதி ரயில்வே விபத்தில் இறந்துவிட்டான். இருப்பினும் எங்கு, எப்பொழுது, யாரால் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்பது பற்றிய சான்றுகள் கிடைக்க வில்லை.

Food Adulteration.

*208 *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) the number of cases registered in connection with food adulteration during 1972–73 and 1973–74; and

(*b*) among them, (i) the number of cases ended in conviction and (ii) the number of cases ended in acquittal?

உணவில் கலப்படம்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1972–73, 1973–74-ஆம் ஆண்டுகளில் உணவில் கலப்படம் செய்தது சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(இ) (i) அவைகளுள் தண்டனை விதிக்கப்பட்டவை (ii) தண்டனை விதிக்கப்படாதவை முறையே எத்தனை ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : (அ) உணவில் கலப்படம் செய்தது சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் முறையே,

1972–73 : 4,541 ; 1973-74 : 4,778

1975 மார்ச் 29]

(இ) (1) அவைகளுள் தண்டனை விதிக்கப்பட்டவை முறையே :

1972–73 : 3,737

1973–74 : 4,055

(2) தண்டனை விதிக்கப்படாதவை :

1972–73 : 94

1973–74 : 151.

[பிற்பகல்—3–10]

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இந்த உணவுக் கலப்படத்தில் பிடிக்கப்பட்டவர்களில், தண்டனை அளிக்கப்பட்டவர்கள் அதிகமாக இருப்பதினாலும், நிரபராதிகள் என்று நிரூபிக்கப்படுபவர்கள் குறைவாக இருப்பதினாலும், மேலும் இதுபோன்ற கலப்புகள் ஏற்படாமலிருப்பதற்கு அரசாங்கத்திற்கு ஏதாகிலும் தீவிர நடவடிக்கை எடுக்க உத்தேசம் இருக்கிறதா ? அல்லது இது சமுதாயத்தின் குறைபாடு என்று அமைச்சர் அவர்கள் கருதுவார்களேயானால், அதற்கான வழி வகை ஏதாகிலும் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கலப்புகள் ஏற்படாமலிருப்பதற்கு என்று சொன்னால் அது தானாகவே ஏற்படுவதாக இருந்தால்தான் அது ஏற்படாமலிருப்பதற்கு என்ன செய்வது என்று யோசிக்க முடியும். யாரோ ஒரு சிலர் கலப்படம் செய்கிறார்கள். செய்கின்றவர்களில் பலர் இவ்வாறு கைது செய்யப்படுகிறார்கள். கைதுசெய்யப்படுபவர்க~~ளுக்கு தண்டனை வழங்கக்கூடிய வாய்ப்பு~~ ஏறத்தாழ நூற்றுக்கு 80 பேருக்கு தண்டனை கிடைத்திருக்கிறது. அப்படி நிரூபிக்கப்பட்டு தண்டனை கிடைக்கப்பட்ட அளவு போதுமானதாக இல்லை என்ற ஒரு கருத்து இன்றையதினம் நிலவுகிறது. தண்டனையை அதிகப்படுத்துவதற்கு இந்திய அரசு ஆலோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அப்படி அதிகப்படுத்தப்படுமானால், ஒரு வேளை இன்னும் ஜாக்கிரதையாக இருப்பார்கள். அம்மாதிரி கலப்படப் பண்டத்தை விற்பவர்கள் ஏமாறாமல் இருப்பார்கள். ஏமாற்றுவதற்கு என்று கலப்பவர்கள் அம்மாதிரித் துணியாமல் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, உணவுப் பொருளில் கலப்படம் செய்வதின் மூலம் மிகவும் ஆபத்தாகவும், அபாயகரமாகவும் ஆன வியாதிகள் பல பேருக்கு வருகின்றன என்று பத்திரிகைகளிலே அடிக்கடி படிக்கிறோம். இப்பொழுது உள்ள சட்டம் போதாது என்று தெரிகிறது. சில பேரைப் பிடிக்கிறார்கள். கோர்ட்டுக்குக் கொண்டு போகிறார்கள். பெரும்பாலான கேஸ்கள் விடுதலை ஆகி விடுகின்றன. இப்படி ஏற்படுமானால்- கடுமையான முறையில் அவர்களைக் கண்காணிக்கவும் காணிக்கவும், தண்டிக்கவும் கோர்ட்டுக்கு அதிகாரம் இருப்பதற்கு மத்திய சர்க்கார் சட்டம் செய்யும்வரை காத்திராமல் நாமே அதைசெய்வதற்கு

ஏதேனும் இடம் இருக்கிறதா ? அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்கிறதா ? அப்படி இருந்தால் நாம் அதை ஏன் துரிதமாகக் கொண்டு வரக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த வகையான எண்ணங்களைக் குறித்து வணிகத் துறையைச் சார்ந்தவர்கள் அதற்கு நேர்மாறான கருத்தை அடிக்கடி அரசாங்கத்திற்கு வலியுறுத்துகிறார்கள். காப்பியோடு கலக்கப்படுகிற, காப்பித்தூளிலே கலக்கிற சில இயல்பான தன்மையினாலேயே அந்தத் தூள் தன்மையிலிருந்து மாறுபட்டு சில தூள்கள் சேர்ந்து விடுகின்றன என்றும், அதனாலே பெர்சன்டேஜ் அதிகப்பட வேண்டுமென்றும், எண்ணெயிலே ஏற்படுகிற கொழுப்புப் பகுதி அதிகமாக இயற்கையிலே இருக்கிறது என்றும் ஒரு பக்கம் அவர்களுக்கு இன்றைக்கு விதிக்கப்படுகிற தண்டனைக்காக சில விதிமுறைகள் இருக்கின்றனவே, அவை தளர்த்தப்பட வேண்டுமென்றும் வியாபாரிகள் சார்பாக தொடர்ந்து வாதாடிக் கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் இன்னொரு பக்கத்தில் தண்டனையை அதிகப்படுத்த வேண்டும் என்கிறார்கள். திட்ட வட்டமான கருத்தைச் சொல்லக்கூடிய நிலையில் நாம் இல்லை. ஆலோசனைகள் எதுவாக இருந்தாலும் அது அந்தத் துறையினரைப் பரிசீலிக்குமாறு கேட்டுத்தான் மேலும் விளக்கம் பெற முடியும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, உணவுக் கலப்படத்தைப் பொறுத்தவரையிலே, நகர மன்றங்களுக்கு அதைக் கண்காணிக்கிற பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்னாலே எல்லாம் இவ்வளவு கலப்படம் இல்லை. இப்போது கலப்படம் அதிகமாகிக்கொண்டு வருகிற காரணத்தாலே, இந்த நகர மன்றகளிலிருந்து பொறுப்பை எடுத்து நேரடியாக அரசாங்க டிபார்ட்மெண்டின் கீழே கொண்டு வருவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தப் பொறுப்பு எல்லாம் மிகப்பெரிதாக ஆகிவிடும். இப்பொழுது நகரத் துறையில் மட்டுமல்ல, உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த சில பஞ்சாயத்துக்களில்கூட, அதாவது 306 உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த மன்றங்கள் என்று சொல்லப்படுகிற காரணத்தாலே, 200-க்கு மேற்பட்ட மேஜர் பஞ்சாயத்துகளிலே இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான முறையிலே இருக்கின்றது. நகர மன்றங்களிலே ஹெல்த் ஆபீசர் என்ற ஒரு அலுவலர் இருக்கிற காரணத்தாலே, பேரூராட்சி மன்றங்களுக்கு சுகாதார நடைமுறைச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான உரிமை கொடுத்திருக்கிற காரணத்தாலே, அவர்களைக் கொண்டுதான் இயங்க முடிகிறது. அரசாங்கமே இந்தப் பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அதற்காகவும் செலவு தற்போதைய நிலையிலே ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பது கடினம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, உணவுக் கலப்படத்திலே எடுக்கப்பட்ட பொருள்களை கிண்டியிலுள்ள கிங் இன்ஸ்டிடியூட்டிலே பரிசோதனை செய்கிறார்கள். ஆனால் அதிகப்படியான அளவிலே இந்த

உணவுப் பொருள்கள் வருமானல், அவைகளை பரிசோதனை செய்யக்கூடிய அளவிலே தற்போது கிங் இன்ஸ்டிடியூட் இல்லை என்று தெரிய வருகிறது. அதற்கு அரசு சில மாவட்டங்களிலே அந்தப் பரிசோதனைச் சாலைகளை அமைக்க இருப்பதாக எனக்குத் தெரிய வருகிறது. அதனுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த கிங் இன்ஸ்டிடியூட் முதன் முதலாகத் தொடங்கப்பட்ட நிலையமாக இருந்தாலும், சென்னை மாநகராட்சியிலே கூட ஒரு பரிசோதனை நிலையம் இருக்கிறது. கோவையிலே ஒரு பரிசோதனை நிலையம் சில பொருள்களைப் பரிசோதனை செய்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. மதுரையில் ஒன்று அண்மையில் கட்டப்பட்டு முடிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவிட்டிருக்கிறோம். அது விரைவிலே செயலுக்குக் கொண்டுவரப்படும். தஞ்சாவூரிலே ஒன்று கட்டப்படுகிறது. அதைத் தொடர்ந்து சேலத்திலே ஒன்றும் நெல்லையிலே ஒன்றும் கட்டப்பட வேண்டும் என்ற ஒரு ஆலோசனை இருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவர் அவர்களே, இந்தக் கலப்பின வியாபாரத்தில் பிடிக்கப்படுகிற பொருள்கள் எனக்குத் தெரிந்த வரையிலே சிறு சிறு வியாபாரிகளிடமிருந்துதான் அதிகமாகப் பிடிக்கப்படுகின்றன. பெரும் வியாபாரிகள் கலப்படம் செய்து அதை மொத்தமாக சிறு சிறு வியாபாரிகளுடைய கடையிலே கொடுத்து விட்டுப் போய்விடுகிறார்கள். ஆனல் இதில் அவஸ்தைப்படுபவர்கள் சில்லரை வியாபாரிகள். அவர்கள் வியாபாரம் செய்யும்பொழுது பிடிபடுகிறார்கள். ஆகையினலே கலப்படம் செய்கின்றவர்களை உற்பத்தி பண்ணும் இடத்திலேயே அவர்கள் மீது கேஸ் போடுகிற அளவிலே நடவடிக்கைகள் எடுக்க வழிவகை செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, திருடுவதிலும் கூட ஏராளமாகத் திருடுபவர்களும், கறுப்புப் பணம் வைத்திருப்பவர்களிலே கூட லட்சக்கணக்கிலே கோடிக்கணக்கிலே வைத்திருப்பவர்களும் தப்பித்துக்கொள்கிறார்கள். அதைப் போல மொத்தமாக யாராவது கலப்படம் செய்தால், அந்தக் கலப்படம் செய்த பொருள்களை அவர்கள் சில்லரை வியாபாரிகளிடத்திலே விற்கிறபோது, அந்தக் கலப்படப் பொருள்களை அவர்கள் வாங்கிக் கொண்டாலும்கூட யாராவது பரிசோதனைக்குச் செல்லுகிறபோது, நல்ல தரமான பண்டத்தைக் காட்டி அவர்கள் மண்டியில் உள்ளது தரமான பொருள் என்று அவர்கள் சொல்லிவிடுகிறார்கள். சாதாரணமாக எளியவர்களாலே வலியவர்களை இந்த வழக்கிலே பிடிப்பது மிகக்கடினமான காரியம். சில்லரை வியாபாரிகள் மக்களிடத்திலே கலப்படப் பண்டங்கள் விற்கிற போது அவை தரமான பண்டம்தானு என்று பார்த்து விற்கவேண்டும். நல்ல எண்ணெய் என்று சொல்லிவிட்டு கலப்பட நெய் விற்பது குற்றம் தான். ஆகவே அந்த அடிப்படையிலே யார் மக்களிடத்திலே விற்கிற நிலையிலே பிடிபடுகிறார்களோ அவர்கள் மீது வழக்கு போடுவதன் மூலமாக அவர்கள் அந்தக் கலப்படப் பண்டம் விற்கிற பெரிய முதலாளிகளிடத்திலே அந்தப் பண்டங்களை

வாங்காமல் அவர்கள் புறக்கணிப்பதன் மூலமாக, அவர்களிடத்திலே அந்தப் பண்டங்களை ஏற்பது இல்லை என்று சொல்வதன் மூலமாகத்தான் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க முடியும்.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, அத்தியாவசியமான உணவுப்பண்டங்களையாகிலும் அரசாங்கம் அக்மார்க் என்ற முறையில் பரிசீலித்து முத்திரையிட்டு நல்ல தரமான உணவுப் பொருள்கள் என்று சான்றிதழ்கள் வழங்குவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன். அதனுல் கலப்படம் குறையும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அக்மார்க் போன்ற சில அடையாளங்களை அரசாங்கம் ஏற்கனவே முறைப்படுத்தியிருக்கிறது. இதைப் பலர் தங்களுடைய பண்டங்களுக்குக் கையாளுகிறுர்கள். சில்லரையாக விற்கிற இடத்திலே இந்த அடையாளங்களோடு அவைகளை விற்பது என்பது கடினமான காரியம். இவ்வாறு சில்லரைப் பண்டங்கள் விற்கிற கடையிலே ஒரு குறிப்பிட்ட அளவிலேதான் அடையாளமிட முடியும். ஆகவே அப்படிப் பண்டங்களை விற்பது மிகக் கடினமான காரியம். ஏழைகளாவே அந்தப் பண்டங்களை வாங்க முடியாது. ஆக, எந்தப் பண்டங்களாக இருந்தாலும், கலப்போடு கூடிய பண்டத்தை விற்கக்கூடாது என்பதற்கு அந்தந்த வியாபாரிகள் பெருமளவு பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.

Prevention of Environmental Pollution.

* 209 *Q.*—THIRU S. NARAYANASWAMY (on behalf of Thiru D. V. D' Monte): Will the Hon. the Minister for Health be pleased to state the steps taken by the Government to prevent environmental pollution, particularly air and water, in the interests of public health?

சுற்றுப்புற தூய்மை கெடுவதைத் தடுத்தல்

திரு. எஸ். நாராயணசாமி (திரு. டி. வி. டி'. மாண்டி சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

மக்கள் நல் வாழ்வு நலனையொட்டி, சுற்றுப்புறத்தூய்மை குறிப்பாக காற்று, தண்ணீர் ஆகியவற்றின் தூய்மை கெடுவதைத் தடுப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சுற்றுப்புறத் துப்புரவிற்காக, தொழிற்சாலைக் கசிவுகள், தொழிற்சாலை வாயுக்கள், இரசாயனங்கள், பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துதல், மக்களின் கவனக்குறைவு போன்ற காரணங்களால் காற்று, நீர், நிலம் ஆகியவற்றின் தூய்மை கேட்டினுல் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து முறையான ஆய்வை மேற்